MCOP: 34/2022

Date: 10.10.2023.

ம.சா.1 பொன்ராஜ், த/பெ கந்தசாமி

1 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

விபத்து சமயத்தில் TN69BM0483 என்ற குட்டியானை மோட்டார் வாகனத்தில் லோடுமேனாக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அந்த மோட்டார் வாகனத்தை அதன் ஓட்டுநர் மெதுவாக ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல, வேகமாக ஓட்டி வந்தார். நான்தான் மோட்டார் வாகனத்தின் பின்புறம் அமர்ந்து சரியாக பிடிக்காமல் நிலைதடுமாறி விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு விபத்தானது 1 வது எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அந்த வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு அமலில் இருந்தது என்றால் சரிதான். எனக்கு ஏதேனும் இழப்பீடு தொகை கிடைக்க வேண்டும் எனில் அதனை 2 வது எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றாலும், 1 வது எதிர்மனுதாரரைப் பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. எனது மாத வருமானம் ரூ. 18,000/- என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(Sd/ R. Selvakumar),
Chief Judicial Magistrate,
Thoothukudi.